*5*

# ஒரு வேதாகம பூமராங்

## (மத்தேயு 5:7)

ஆஸ்திரேலியாவின் ஆதிகுடிகளால்[1] கண்டுபிடிக்கப்பட்ட, பூமராங்[2] என்ற - அதிசயமான வளைந்த கோல்போன்ற - கருவியைப் பற்றி நம்மில் பலர் கேள்விப்பட்டிருக்கிறோம், இது காற்றில் சுலபமாகப் பறந்துசென்று அதை எறிந்தவரிடத்திற்கே திரும்பி வருகிறது.[3]

அதாவது, பூமராங் என்பது சரியாக எறியப்படும்போது, அதை எறிபவரிடத்திற்கே அது திரும்பி வருகிறது. எனது குடும்பத்தினருடன் நான் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்தபோது நான், பல பூமராங்குகளை வாங்கி அவற்றை எறிய முயற்சி செய்தேன். அவைகள் சரியாக என்னை நோக்கி வரவில்லை என்றாலும், எனது திசையில் திரும்பி வந்தன. மோசமாக எறியப்பட்ட பூமராங்குகளைத் திரும்பி மீட்டு எடுப்பதற்கு நான் ஒரு சில மரங்களின் மீது ஏற வேண்டியிருந்தது.

வேதாகமத்தில் ஆவிக்குரிய பல "பூமராங்குகள்" உள்ளன. சரியாக எறியப்படாத எனது பூமராங்குகளைப் போலின்றி, இவைகள் *எப்போதுமே* இவற்றை "வெளியே எறிந்தவரிடம்" மிகச் சரியாகத் திரும்பி வருகின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்:

> ... மனுஷன் எதை விதைக்கிறானோ [பூமராங் சுழன்று கொண்டே போகிறது] அதையே அறுப்பான் [இங்கு அதை எறிபவரிடம் அது திரும்பி வருகிறது] (கலாத்தியர் 6:7).
>
> உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் [வெளியேபோகிறது] போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் [திரும்பி வருகிறது] (பிரசங்கி 11:1).
>
> "ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே [வெளியேறுதல்] நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும் [திரும்பி வருதல்]" (மத்தேயு 7:2).[4]
>
> "கொடுங்கள் [வெளியேறுதல்], அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள் [திரும்பி வருதல்]; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ [வெளியேறுதல்] அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் [திரும்பி வருதல்] என்றார்" (லூக்கா 6:38).

நாம் இப்போது பாக்கியங்களைப் பற்றிப் படித்துக் கொண்டிருக்கிறோம். இவற்றின் இருதயம் போன்ற மையப்பகுதியில் நாம்,

வேதாகமத்தின் இந்த பூமராங்கைக் காணுகிறோம்: “இரக்கமுள்ளவர்கள் [வெளியேறுதல்] பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள் [திரும்பி வருதல்]” (மத்தேயு 5:7). பெரும்பாலும் இரக்கமற்றதாக இருக்கும் இந்த உலகத்தில், இரக்கம் நிறைந்தவர்களாக உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் மிகவும் தேவைப்படுகின்றனர். இந்த பாக்கியத்துடன் வலியுறுத்தத்தில் ஒரு மாற்றம் உள்ளது என்று பல விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர். D. மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> ... முதல் மூன்று பாக்கியங்கள் ... - ஆவியில் எளிமை, பாவத்தன்மையால் துயரப்படுதல், சுயத்தின் இயல்பை உண்மையாகப் புரிந்துகொள்ளுதலின் விளைவாக ஏற்படும் சாந்தகுணம் போன்ற - தேவைகளைப் பற்றிய நமது உணர்வைக் குறித்தவையாக உள்ளன ... பின்பு தேவையின் திருப்தி பற்றிய மாபெரும் கூற்று வருகிறது “நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவான்கள்”; அங்கிருந்து நாம் அந்த திருப்தியின் விளைவை எதிர்நோக்குகிறோம். ... நாம் இரக்கம் நிறைந்தவர்களாக, இருதயத்தில் சுத்தம் உள்ளவர்களாக, சமாதானம் பண்ணுகிறவர்களாக ஆகிறோம்.[5]

## “இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ...”

### இரக்கம் என்பதன் அர்த்தம்

எனது மேஜையில் உள்ள அகராதியில், “இரக்கம்” என்பதை, “பரிவிரக்கமாக நடத்துதல், குறிப்பாக ஒருவர் தம் அதிகாரத்தின் கீழ் உள்ளவர்களை அவ்வாறு நடத்துதல் ... இரக்கம் மற்றும் மன்னித்தலின் நிலைப்பாடு” என்று விளக்கப்படுத்துகிறது.[6] “இரக்கம்” என்று மொழிபெயர்க்கப்படும் பொதுவான கிரேக்க வார்த்தை (*eleos*) “பரிதாபமான மற்றும் துன்பப்படுகிறவர் மீது இரக்கம் அல்லது நல்ல சித்தமும், அவர்களை விடுவிக்கும் விருப்பமும் கொண்டிருத்தல்” என்று அர்த்தப்படுகிறது.[7] இரக்கம் என்பது எதிர்மறையாகவும் விளக்கப்படுத்தப் படக்கூடும். எதிர்த்துக் தாக்குதல் என்பது நமது பலத்தில் உள்ளபோது, நம்மைத் தவறாக நடத்திய ஒருவருக்கு அவர் பெறத் தகுதியுள்ள வகையில் நடத்தாமல் இருத்தல், அவருக்கு இரக்கம் காண்பித்தல், இரக்கத்தையும் மன்னிப்பையும் அவருக்கு நீட்டித்தல் என்று அர்த்தப்படுகிறது. நேர்மறையாகக் கண்ணோக்குகையில் இரக்கம் என்பது பல அத்தியாவசியமான அம்சங்களைக் கொண்டுள்ளது. இது தேவையில் இருப்போரின் துன்பநிலையினால் அசைக்கப்படுகிற மனதின் நிலைப்பாடாக உள்ளது. இது தேவையில் இருப்போருக்கு உதவுவதற்கான விருப்பத்தைத் தூண்டுகிறது மற்றும் உதவுவதற்கு ஒருவர் உண்மையில் செய்யக்கூடியவற்றினால் விளக்கப்படுத்தப்படுகிறது. இரக்கம் என்பது *இருதயம்* மற்றும் *கரங்கள்* ஆகிய இரண்டின் செயல் களையும் உள்ளடக்குகிறது என்று யாரோ ஒருவர் கூறியிருக்கிறார். இருதயம் அசைக்கப்படாத வரையிலும் மற்றும் உதவுவதற்குக் கரங்கள் சென்று அடையாத வரையிலும் அது இரக்கமாக இருப்பதில்லை.

நல்ல சமாரியன் உவமையில் இரக்கத்தின் பல்வேறு அம்சங்கள் விவரிக்கப்பட்டுள்ளன (லூக்கா 10). சாலையோரத்தில் ஒரு மனிதன்

அடிக்கப்பட்டுக் குற்றுயுராகக் கிடந்தான் (வசனம் 30). பல மக்கள் அவ்வழியே சென்றனர் (வசனங்கள் 31, 32). அந்த மனிதனை அப்படிப் பரிதாபமான நிலையில் கண்டது பற்றி அவர்கள் நிச்சயமாகவே வருத்தப்பட்டனர், ஆனால் அவர்கள் எதையேனும் செய்வதற்குத் தூண்டப்படவில்லை. பின்பு ஒரு சமாரியன் அவ்வழியே கடந்து சென்றான். அவன் அந்த மனிதனைக் கண்டபோது, "மனதுருகினான்" (வசனம் 33) மற்றும் அவனுக்கு உதவுவதற்குத் தன்னால் இயன்றதைச் செய்தான். அவன் அந்த மனிதனின் காயங்களுக்குச் சிகிச்சை செய்து அவற்றைக் கட்டினான். அவனை ஒரு சத்திரத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் காயமடைந்த அம்மனிதனுக்குத் தொடர்ந்து பராமரிப்பு அளிக்கச் செய்தான் (வசனங்கள் 34, 35). இந்தக் காரணத்தினால் அந்த சமாரியன், அம்மனிதனிடத்தில் *"இரக்கஞ் செய்தவன்"* என்று விவரிக்கப்பட்டான் (வசனம் 37).

மற்ற விவரிப்புகள் தரப்படலாம்,[8] ஆனால் இரக்கத்தின் பண்பு தேவனைக் கண்ணோக்குவதால் மிகச்சிறந்த வகையில் விவரிக்கப்படுகிறது. பிசாசானவன் "பொய்யுக்குப் பிதாவாக" இருக்கையில் (யோவான் 8:44), தேவன் "இரக்கங்களின் பிதாவாக" இருக்கிறார் (2 கொரிந்தியர் 1:3).[9] "கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுள்ளவராயிருக்கிறார்" என்பதால் (யாக்கோபு 5:11), அவர் "இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராக" இருக்கிறார் (எபேசியர் 2:4) என்பதால் நாம் எவ்வளவு நன்றி நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்! தேவன் நீதியின் தேவனாக மாத்திரம் இருந்திருந்தால், மனிதகுலத்திற்கு நம்பிக்கை எதுவும் இருந்திருக்காது, ஏனெனில் "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி" னோம் (ரோமர் 3:23). இருப்பினும் அவர் அன்பின் தேவனாகவும் இருக்கிறார். அவர் "நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்" (சங்கீதம் 103:14). அன்புகூரும் தேவன் என்ற வகையில் அவர் நம்மீது தமது இரக்கங்களைப் பொழிந்தார்: அவர் தமது குமாரனை நமது பாவங்களுக்காக மரிக்கும்படி அனுப்பினார்.

> ... சிலுவையின் மீது "இரக்கமும்[10] சத்தியமும் ஒன்றாகச் சந்தித்தன, நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தம் செய்தன" (சங்கீதம் 85:10). மனிதனின் பாவம் அவனைத் தேவனுடைய நகரத்தில் இருந்து தடைசெய்கிறது என்று சத்தியம் கூறுகிறது; மனிதனின் குறைவுகளைக் கிறிஸ்துவின் இரத்தம் மூடட்டும் என்று இரக்கம் கூறுகிறது! பாவி பரலோகத்தின் கோட்டை மதில்களைக் கடந்து செல்லுதல் நீதியல்ல/சரியல்ல என்று நீதி கூறுகிறது; மனிதனுக்கும் அவனை உண்டாக்கினவருக்கும் இடையில் ஒப்புரவு ஏற்படும்படி கிறிஸ்து மத்தியஸ்தராக இருக்கட்டும் என்று சமாதானம் கூறுகிறது![11]

தேவனுடைய இரக்கத்தை முற்றிலுமாகப் புரிந்துகொள்வதற்கு, இயேசுவின் வாழ்வில் அந்தப் பண்பு வெளிப்படுத்தப்படுவதைக் காணுதல் உதவுகிறது (காண்க யோவான் 14:9). இரக்கமே இயேசு இந்தப் பூமிக்கு வருவதற்குக் காரணமாயிற்று. இரக்கமே அவர் வியாதிப்பட்டவர்கள் மற்றும் துன்புற்றவர்கள் மத்தியில் உலாவக் காரணமாயிற்று. அவரது இரக்கம் துன்புற்ற மற்றும் வறிய மக்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் மேட்டிமையான பரிசேயர்கள் மற்றும் உறைந்த இருதயம் உள்ள சதுசேயர்கள் ஆகியோருக்கும் காண்பிக்கப்பட்டது

*- மற்றும், ஆம், அது சுயதிருப்தி கொண்டிருந்த மற்றும் அவிசுவாசம் கொண்ட எருசலேம் மீதும் கூட காண்பிக்கப்பட்டது. அவரது இரக்கம் மனித துன்பங்களுக்குப் போலவே மனித பாவத்திற்கும் நீட்டிக்கப்பட்டது. அவரது இரக்கம் கடைசியில் அவரை சிலுவைக்கு இட்டுச் சென்றது, மற்றும் இப்போது அவர் பரலோகத்தில் நமது "இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராக" (எபிரெயர் 2:17) தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.*

**இரக்கத்திற்கான தேவை**

*"தேவனுடைய இரக்கங்களை" (ரோமர் 12:1) நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், இயேசுவிடம் இருந்து பின்வரும் அறைகூவல் நமக்கு வருகிறது: "உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" (லூக்கா 6:36). கர்த்தர் இரக்கமுள்ளவராயிருக்கிறது போல இரக்கமுள்ளவர்களாக இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? முதலாவதாக இது, நமது இருதயங்கள் மற்றவர்களின் தேவைகளினால் தொடப்பட வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. மக்கள் இயேசுவினிடத்தில், "எங்களுக்கு இரங்கும்" என்று கெஞ்சினர் (காண்க மத்தேயு 9:27), மற்றும் அவர் அதைக் காண்பித்தார். அவர் "மனதுருகினார்" என்று அடிக்கடி கூறப்பட்டுள்ளது (காண்க மத்தேயு 9:36; 14:14; 20:34; மாற்கு 1:41; 6:34). அதுபோன்றே நீங்களும் நானும் "... உருக்கமான இரக்கத்தை ... தரித்துக்கொண்டு" இருக்க வேண்டும் என்று கட்டளை இடப்பட்டுள்ளோம் (கொலோசெயர் 3:12).*

*மோசமான காலங்களை அனுபவித்த ஒரு மனிதரைப் பற்றிய கதையானது ரால்ஃப் பம்ப்பஸ்[12] என்பவருக்குப் பிரியமான கதைகளில் ஒன்றாக உள்ளது. உண்மையில் பணம் தேவைப்படும் எவர் ஒருவருக்கும் கடன் கொடுக்கத் தமது வெறுப்புணர்வைக் காண்பிப்பதில் பிரபலமாயிருந்த ஒரு வங்கியாளரிடத்தில் இம்மனிதர் கடனுக்கு விண்ணப்பித்திருந்தார். இம்மனிதரின் கவலைமிகுந்த கதையைக் கேட்ட வங்கியாளர், "நான் ஒரு நல்ல மனிதன், எனவே உங்களிடம் ஒரு முன்மொழிதலை ஏற்படுத்த என்னை அனுமதியுங்கள். ஒரு செயற்கைக் கண்ணை எனக்குப் பொருத்துவதற்காக நான் இப்போதுதான் மிகப்பெரிய தொகையைச் செலவிட்டேன்." அது எனது உண்மையான கண்ணைப் போன்றே காணப்படுகிறது. இதோ எனது முன்மொழிதல்: எனது கண்களில் எந்தக் கண் செயற்கைக் கண் என்று நீங்கள் கூறமுடியும் என்றால், நான் உங்களுக்குப் பணம் கடனாகக் கொடுப்பேன். "உடனே அம்மனிதர் அந்த வங்கியாளரின் கண்களைச் சற்றுநேரம் உற்றுப்பார்த்தார். கடைசியாக அவர், இடது கண்தான் செயற்கைக் கண்" என்று கூறினார். வங்கியாளர் திகைத்துப்போனார். "நீங்கள் கூறியது சரியே, ஆனால் இடது கண் தான் செயற்கையானது என்று உங்களால் எப்படிக் கூற முடிந்தது?" என்று அவர் கேட்டார். அதற்கு அம்மனிதர், "ஏனென்றால் உங்கள் இடது கண்ணில் பரிவிரக்கத்தின் சிறு சுடர் ஒன்றை நான் கண்டேன்" என்று பதில் அளித்தார்.*

*மக்கள் நமது கண்களுக்குள் பார்க்கும்போது, அவர்கள் உண்மையான பரிவிரக்கத்தைக் காண முடியுமா? இயேசுவைப் போன்று நாமும் மற்றவர்களின் பலவீனங்களைக் காணுகையில் பரிவிரக்கம் கொள்வது அவசியமாக உள்ளது (காண்க எபிரெயர் 4:15). நமக்கு, மற்றவர்களின் தேவைகளால் தொடப்படும் இருதயங்கள் தேவையாயிருக்கின்றன.*

உதவுவதற்குச் சென்றடையும் *கரங்களும்* நமக்குத் தேவை. இருதயமும் கரங்களும் ஈடுபடாத வரையிலும் அது உண்மையான இரக்கமாக இருப்பதில்லை என்பதை நினைவில் வையுங்கள். நாம், "உடுக்கவும் அன்றாட உணவும் இல்லாத" சகோதர சகோதரிகளைக் கண்டால், அவர்களுக்காக வருத்தப்பட்டால் மாத்திரம் போதாது. நாம் "அவர்களுடைய சரீரத்திற்குத் தேவையானவற்றை கொடுப்பது" அவசியம் (யாக்கோபு 2:15, 16). இயேசுவைப் பற்றிப் பயன்படுத்தப்பட்ட பின்வரும் சொல்விளக்கத்தை நான் விரும்புகிறேன்: அவர் *"மனதுருகினார்"* (காண்க மத்தேயு 20:34; மாற்கு 1:41; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இயேசு பரிவிரக்கத்தை உணர்ந்தபோது, அவர் உள்ளாக மனதுருகினார், பின்பு ஏதேனும் சிலவற்றைச் *செய்ய* அசைக்கப்பட்டார்; அவரது இரக்கம் வெளிப்படுத்தப்பட்டது (காண்க மாற்கு 5:19). அதுபோலவே, நீங்களும் நானும் "தன்தன் சகோதரனுக்குத் தயவும் ["mercy;" KJV] இரக்கமும் செய்ய" வேண்டும் (சகரியா 7:9).[13]

மீண்டுமாக, பாக்கியங்களின் இயல்பான வளர்நிலையை வலியுறுத்த என்னை அனுமதியுங்கள். தமது ஆவிக்குரிய தேவையை உணர்ந்து அறிகிற (பாக்கியம் எண் ஒன்று) மற்றும் அதன் காரணமாகத் துக்கம் அடைகிற நபர் (பாக்கியம் எண் இரண்டு) சாந்தமும் தாழ்மையும் உடையவராவார் (பாக்கியம் எண் மூன்று) மற்றும் அவர் ஆவிக்குரிய போஷாக்கின் மீது விருப்பம் கொண்டவராவார் (பாக்கியம் எண் நான்கு). தமது புரிந்து கொள்ளுதலில் இவ்வளவு தூரம் வந்துள்ள ஒருவர், தாம் கொண்டுள்ள அதே ஆவிக்குரிய தேவைகளையும் அதே ஆவிக்குரிய குறைபாடுகளையும் மற்றவர்களும் கொண்டுள்ளனர் என்பதைப் உணர்ந்து அறிவார். இது அவர்களை நடத்தும்போது உருக்கம், அனுதாபம், இரக்கம் மற்றும் அன்பு நிறைந்தவராய் இருக்கும்படித் தூண்டவேண்டும்.

ஆகையால், நாம் ஒவ்வொருவரும் நம்மையே மதிப்பீடு செய்தல் என்பது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது! நம்மை நாமே, "நான் இரக்கம் நிறைந்தவனாக இருக்கிறேனா? அல்லது மற்றவர்களைக் குறித்து கவலைப்படாத அளவுக்கு, நான் எனது சொந்தத் தேவைகள் மற்றும் பிரச்சனைகளிலேயே கவனம் குவித்திருக்கிறேனா?" என்று கேட்டுக்கொள்வோமாக. ஓசியா 6:6ல் கர்த்தர், "பலியை அல்ல இரக்கத்தையும், ... விரும்புகிறேன்" என்று கூறினார். இவ்வசனத்தில், LXX வேதாகமத்தில் வழக்கமாக *eleos* ("mercy") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை NASB வேதாகமத்தில் "loyalty" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (தமிழில் இது "இரக்கம்" என்றே உள்ளது). KJV வேதாகமத்தில், "For I desired mercy, and not sacrifice" என்றுள்ளது. இயேசு புதிய ஏற்பாட்டில், ஓசியா 6:6ஐ இருமுறை மேற்கோள் காண்பித்தார், மற்றும் அந்த ஒவ்வொரு முறையிலும் அவர் தமது உரையைக் கேட்பவர்களிடத்தில், அவ்வார்த்தைகள் எதை அர்த்தப்படுத்தின என்று கற்றுக் கொள்ளும்படி அறைகூவல் விடுத்தார் (மத்தேயு 9:13; 12:7). தேவன் பலியை விரும்புகிறாரா?[14] ஆம், ஆனால் இரக்கமில்லாத பலி மதிப்பில்லாததாக இருக்கிறது. தவறாகப் புரிந்துகொள்ளப்படும் என்ற இடர்ப்பாட்டில் நான் ஒன்று கூற விரும்புகிறேன் - ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்குதல் ஆகியவை முக்கியமானவையாக உள்ளன, அத்தியாவசியமாகக் கூட உள்ளன - ஆனால் நமது இருதயங்களில் பரிவிரக்கமோ அல்லது இரக்கமோ இல்லை என்றால், தேவனுடைய சித்தத்துடன் ஒன்றிப்போகுதல் என்ற வகையில்

நமது புறம்பான செயல்கள், வெற்றுச் சைகைகள் என்பதைவிடச் சற்றே அதிகமானதாக மாத்திரமே இருக்கும் (1 கொரிந்தியர் 13:1-3 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).

நமது வேதவசனப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடரைக் கவனிக்கவும்: "*இரக்கமுள்ளவர்கள்* பாக்கியவான்கள்." "இரக்கமுள்ளவர்கள்" என்பதற்கான ஆங்கிலச் சொல்லான "merciful" என்பது "இரக்கத்தினால் நிறைந்திருத்தல்" என்று அர்த்தப்படுகிறது.[15] வயது முதிர்ந்த மனிதர் ஒருவரிடத்தில், அவர் ஒரு கிறிஸ்தவரா என்று கேட்கப்பட்டது. அவர், "[குறிப்பிட்ட சில] இடங்களில் [நான் கிறிஸ்தவன்]" என்று பதில் அளித்தார்.[16] நாம் "[குறிப்பிட்ட சில] இடங்களில்" மாத்திரம் கிறிஸ்தவர்களாக இருப்பது கூடாது. "இரக்கமுள்ளவர்களாக" இருத்தல் என்பது இரக்கத்தின் அவ்வப்போதான, தனிப்படுத்தப்பட்ட செயல்பாட்டைக் குறிப்பதில்லை. மாறாக இது, அக்கறை செலுத்துதல் மற்றும் உதவிசெய்தல் ஆகியவற்றைக் கொண்ட வாழ்வுநடையைக் குறிக்கிறது. நாம் சுய - மையம் கொண்டவர்களாக அல்ல, ஆனால் மற்றவர்கள் மீது "இரக்கம் நிறைந்தவர்களாக" இருக்கத் தேவன் நமக்கு உதவுவாராக.

## "... அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."

நமக்கு இரக்கம் தேவைப்படுகிறதா? எனது பாட்டியார் தமது கண்களைச் சுழற்றி, தமது கரங்களை ஆகாயத்தை நோக்கித் தூக்கி, "ஓ, ஆம்!" என்று வியப்படைந்திருப்பார்கள். கடந்த காலத்தைக் கண்ணோக்குங்கள். இரக்கம் இல்லாதிருந்தால் இது வரையிலும் நாம் எவ்வாறு உயிர் பிழைத்திருக்க முடிந்திருக்கும்? நிகழ்காலத்தைக் கண்ணோக்குங்கள். இன்றைய நாளில் நமக்குத் தேவனுடைய இரக்கம் எவ்வளவாகத் தேவைப்படுகிறது! எதிர்காலத்தைக் கண்ணோக்குங்கள். அது இன்றி நாம் எவ்வாறு தொடர்ந்து செல்ல முடியும்? இருப்பினும் அந்த இரக்கமானது, இரக்கமுள்ளவர்களுக்கே வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நமது வேதவசனப் பகுதியில் உள்ள "அவர்கள்" என்பது அழுத்தமூட்டப் பட்டதாக உள்ளது:[17] "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; *அவர்கள்* இரக்கம் பெறுவார்கள்." பூமாராங் சுற்றிச் சுழன்று வெளியே சென்றதை நாம் கண்டிருக்கிறோம்; இப்போது அது பின்னோக்கிப் பறந்து வருவதைக் கவனிப்போமாக.

### இந்த வாழ்வில் இரக்கம்

இயேசு கூறியபடி, "வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" (நடபடிகள் 20:35) என்பதால், இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்களாக உள்ளனர். ஞானி, "தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்" என்று எழுதினார் (நீதிமொழிகள் 14:21). வில்லியம் ஷேக்ஸ்பியருடைய பாத்திரப் படைப்புக்களில் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்:

> இரக்கத்தின் பண்பு ... வானத்தில் இருந்து வரும் மெல்லிய மழைத்தூறல் போன்று சொட்டுகிறது
> அது கீழான இடங்களின் மீது பொழிகிறது: அது இருமுறை ஆசீர்வதிக்கிறது:

*அது கொடுக்கிறவரை ஆசீர்வதிக்கிறது, மற்றும் பெறுகிறவரையும் ஆசீர்வதிக்கிறது.*[18]

*இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ஏனெனில் அவர்கள் தங்களைச் சுற்றிலும் உள்ளவர்கள் இடமிருந்து இரக்கம் பெற்றுக்கொள்ள அதிகம் வாய்ப்பு உள்ளது. இது ஒரு பொதுவான உண்மையாக உள்ளது, ஆனால் இது முற்றான உண்மையாக இருப்பதில்லை - ஆனால் விதிப்படி, நாம் மற்றவர்களை எவ்வாறு நடத்துகிறோமோ அவ்வாறே அவர்களும் நம்மை நடத்துகின்றனர்.*[19] *நீங்கள் மற்றவர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தீர்கள் என்றால், வழக்கமாக அவர்கள் உங்களைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பார்கள். நீங்கள் மற்றவர்களுக்கு "ஹலோ" கூறினால், அவர்கள் உங்களுக்கு "ஹலோ" கூற வாய்ப்பு உள்ளது. மற்றவர்கள் வியாதிப்பட்டு இருக்கும்போது நீங்கள் அவர்களுக்கு உதவினால், நீங்கள் வியாதிப்பட்டு இருக்கும்போது அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். இந்த சத்தியத்தின் எதிர்மறை உண்மையைப் பேதுரு பின்வருமாறு கொடுத்தார்: "நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்?" (1 பேதுரு 3:13; காண்க நீதிமொழிகள் 16:7). இதை நாம், பொன்விதியின் (மத்தேயு 7:12) மறுதலை என்ற வகையில் நினைக்கலாம்: மற்றவர்களுக்கு நீங்கள் என்ன செய்கிறீர்களோ, அதையே அவர்கள் (வழக்கமாக) உங்களுக்குச் செய்வார்கள்.*

*இரக்கம் நிறைந்தவர்களுக்குத் தேவன் இரக்கம் நிறைந்தவராக இருப்பதால் அவர்கள் பாக்கியவான்களாக இருக்கின்றனர் என்பது மிகவும் முக்கியமானதாகும். நாம் ஏழைகள்மீது இரக்கம் நிறைந்தவர்களாக இருந்தால், தேவன் நம்மை விடுவிப்பதாகக் கூறியுள்ளார். "சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்" (சங்கீதம் 41:1). மற்றவர்களை மன்னிப்பதில் நாம் இரக்கம் நிறைந்தவர்களாக இருந்தால், அவர் நம்மை மன்னிப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார். "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்" (மத்தேயு 6:14).*

*இது, இரக்கம் நிறைந்தவர்களாகவும் மன்னிப்பவர்களாகவும் இருத்தல் என்பதுதான் தேவன் விரும்புகிற மற்றும் கேட்டுக்கொள்கிற யாவுமாக உள்ளது என்று அர்த்தப்படுவதில்லை. "நாம் தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற* ஒவ்வொரு *வார்த்தையின்" படியும் வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம் (மத்தேயு 4:4; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இருப்பினும் இது, [மக்களிடத்தில்] மற்ற எல்லா விஷயங்களும் சமமாக இருக்கையில், இரக்கம் நிறைந்த மனிதரே ஆசீர்வதிக்கப்படுவார் என்று அர்த்தப்படுகிறது. நீங்கள் இதை எவ்விதமாகக் கண்ணோக்கினாலும், "தயையுள்ள மனுஷன் தன் ஆத்துமாவுக்கு நன்மை செய்துகொள்ளுகிறான்" (நீதிமொழிகள் 11:17).*

**இனிவரும் வாழ்வில் இரக்கம்**

*நமக்கு இப்போது இரக்கம் தேவைப்படுகிறது, ஆனால் நியாயத்தீர்ப்பில் நாம் தேவனுடைய அரியணைக்கு முன்பாக வரும்போது, இது நமக்கு இன்னும் அதிகமாகத் தேவைப்படும். அந்த வேளையில் நம்மீது அவரது இரக்கம் ஓரளவுக்கு, நாம் இரக்கம் நிறைந்தவர்களாக இருந்ததைச் சார்ந்ததாக இருக்கும்.*

*பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *ஒநேசிப்போருவின் வீட்டாருக்குத் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான்; என் விலங்கைக்குறித்து அவன் வெட்கப்படவுமில்லை; அவன் ரோமாவில் வந்திருந்தபோது அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான். அந்நாளிலே [நியாயத்தீர்ப்பின் நாளிலே] அவன் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகஞ்செய்வாராக (2 தீமோத்தேயு 1:16-18அ).*

*இந்த வாழ்வில் நாம் இரக்கம் இல்லாதவர்களாக இருந்தால் என்னவாகும்? அப்போது நாம் இரக்கம் பெறமாட்டோம். மத்தேயு 18:23-35ல் இரக்கம் இல்லாத வேலைக்காரன் பற்றிய உவமையை இயேசு கூறினார். அந்த வேலைக்காரனின் எஜமானர் அவனுக்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் கடனை மன்னித்திருந்தார்,[20] ஆனால் அவன் தன்னிடத்தில் தனது சக வேலைக்காரன் பட்டிருந்த ஒரு சில ரூபாய் கடனை மன்னிக்காதிருந்தான். அவனது எஜமானர் அவனிடத்தில், "நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ'' என்று கூறினார் (வசனம் 33). பின்பு அவனது எஜமானர், "கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்" (வசனம் 34). இயேசு பின்வரும் தெளிந்த அறிவுள்ள வார்த்தைகளுடன் இந்த உவமையை முடித்தார்: "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" (வசனம் 35).*

*யாக்கோபு 2:13ல் நாம், வேதாகமத்தில் உள்ளவற்றிலேயே மிகவும் கடுமையான வார்த்தைகளில் சிலவற்றைக் காணுகிறோம்: ''ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்.'' இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பைக் கொண்டிருத்தல் என்பது நம்பிக்கையற்ற நிலையில் இருத்தலாகும், ஏனெனில் நாம் யாவரும் பாவிகளாக இருக்கிறோம் மற்றும் பாவத்தின் சம்பளம் மரணமாக (ரோமர் 3:23;6:23) ஆவிக்குரிய மற்றும் நித்திய மரணமாக உள்ளது (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:8). நியாயத்தீர்ப்பு நாளில் எனக்கு இரக்கம் கிடைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், நீங்கள் அவ்வாறு விரும்புவது இல்லையா? அப்படியென்றால் நீங்களும் நானும் இப்போது இரக்கம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்.*

## முடிவுரை

*வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் மீது இயேசு தமது "ஐயோக்களை" உரைத்தபோது, அவர்களிடத்தில் அவர், ''நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும்* ***இரக்கத்தையும்*** *விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்'' என்று கூறினார் (மத்தேயு 23:23; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இரக்கம் நிறைந்தவர்களாக இருத்தலைப் புறக்கணிக்காதிருப்பதற்குத் தேவன் நமக்கு உதவுவாராக. இயேசு சென்ற இடங்களில் எல்லாம் மக்கள், "இரங்கும்" என்று கதறினர் (காண்க மத்தேயு 9:27;*

*15:22; 17:15; 20:30, 31). அதுபோன்றே உலகமானது இன்றைய நாட்களிலும் "இரங்கும்!" என்று கதறுகிறது. கர்த்தருடைய சீஷர்கள் என்ற வகையில், நாம் அந்தக் கதறுதலுக்குப் பதில் அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசுவைப் போன்றே நாமும், உடல்ரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் துன்புறும் எல்லார் மீதும் பரிவிரக்கம் கொண்டிருப்போமாக. இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."*

*உங்கள் இருதயங்களைப் பரிசோதித்துப் பார்த்து, அதில் மற்றவர்கள் மீது இரக்கம் உள்ளதா என்று காணும்படி நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் நான், நீங்கள் உங்கள் சொந்த ஆவிக்குரிய தேவைகளைப் பற்றி அக்கறை கொண்டிருக்கிறீர்களா இல்லையா என்பதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும்படியும் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தேவனுடன் சரியான நிலையில் இல்லையென்றால், உங்களால் மற்றவர்களுக்கு உதவ இயலாது. நீங்கள் உங்களைத் தேவனுடைய இரக்கத்திற்கு விட்டிருக்கிறீர்களா? இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? மற்றும் நீங்கள் கீழ்ப்படிதலில் உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தி இருக்கிறீர்களா (யோவான் 8:24; 14:15)? நீங்கள் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற வேண்டியுள்ளதா (நடபடிகள் 8:36-38)? நீங்கள் கர்த்தருக்கு உங்கள் வாழ்வை மறுபடியும் ஒப்புவிக்க வேண்டியுள்ளதா (காண்க யாக்கோபு 5:19, 20)? நீண்ட காலத்திற்கு முன்பே, "உங்கள் தேவனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர்; நீங்கள் அவரிடத்திற்குத் திரும்பினால், அவர் தம்முடைய முகத்தை உங்களைவிட்டு விலக்குவதில்லை" என்று எழுதப்பட்டுள்ளது (2 நாளாகமம் 30:9). நீங்கள் அவ்வாறு செய்வது அவசியம் என்றால் நீங்கள் இன்றைக்கே அவரிடம் திரும்ப வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கிறேன்.*

---

குறிப்புகள்

[1]*இந்தப் பாடத்தின் தலைப்பு, ஹியூகோ மெக்கார்டு என்பவர் எழுதிய* "A\ Boomerang," *Happiness Guaranteed* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1956), 37 *என்ற தலைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது.* [2]*"ஆதிகுடிகள்" என்பது ஆங்கிலத்தில்* "Aborigines" *என்று கூறப்படுகிறது, இது "தோற்றகாலக் குடிகள்" என்று அர்த்தப்படுகிறது* (*The American Heritage Dictionary*, 4th ed. [2001], s.v. "aborigine"). *ஆஸ்திரேலியாவில் இது அந்தக் கண்டத்திற்கு ஐரோப்பியக் குடிகள் வருவதற்கு முன்பே வாழ்ந்திருந்த மக்களைக் குறிக்கிறது.* [3]*திரும்பி வராத பூமராங் ஒன்றும் உள்ளது, இது பெரியதாகவும் கனமானதாகவும் உள்ளது, இது வேட்டையாடப் பயன்படுகிறது. இருப்பினும் பூமராங் என்பது திரும்பி வரும் கோல் என்றே பெரும்பான்மையானவர்கள் நினைப்பதால் இவ்விடத்தில் இதை விளக்கப்படுத்த அவசியமில்லை.* [4]*இந்தக் கொள்கைக்கான ஒரு உதாரணம் நியாயாதிபதிகள் 1:7ல் காணப்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 18:6, 7ல் மகாபாபிலோனுக்கு விதிக்கப்பட்ட உறையவைக்கும் தண்டனை இன்னொரு உதாரணமாக உள்ளது.* [5]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount*, vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 107. [6]*The American Heritage Dictionary*, 4th ed. (2001), s.v. "mercy." [7]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T.

Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 203. [8]*எடுத்துக்காட்டாக, ஊதாரி மகன் உவமையில், மகன் திரும்பி வந்தபோது அவன் மீது தந்தை இரக்கம் காண்பித்தார்.* [9]*"இரக்கங்கள்" என்பது* eleos: oiktirmos, *என்பதன் ஒருபொருள் சொல்லாக உள்ளது, இது "கருணை, மற்றவர்களின் துன்பங்களுக்காகப் பரிவிக்கம் கொள்ளுதல்" என்பதைக் குறிக்கிறது* (W. E. Vine, Merrill F. Unger, and Willam White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testment Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 404). [10]*இந்த மேற்கோள்* KJV *வேதாகமத்தில் இருந்து வருகிறது.* NASB *வேதாகமத்தில்* "mercy" *என்பதற்குப் பதிலாக* "lovingkindness" *என்றுள்ளது.* "Lovingkindness" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை* [*hesed* or *chesed*] LXX *(அல்லது செப்துவஜிந்த் எனப்படும் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில்) எப்போதுமே* "mercy" [*eleos*] *என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* (Ibid., 142.)

[11]McCord, *38.* [12]*பல ஆண்டுகளுக்கு முன்னர், ரால்ஃப் பம்ப்பஸ் என்பவர் பல பகுதிகளில் வேதாகமப் பள்ளிப் பணிமனைகளில் மிகச்சிறந்த பேச்சாளராக இருந்தார். பல சந்தர்ப்பங்களில் அவர் இந்தக் கதையைக் கூறியதை நான் கேட்டிருக்கிறேன்.* [13]*இது உங்கள் உரையைக் கேட்பவர்களின் குறிப்பிட்ட சில தேவைகளைப் பற்றி நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்த உகந்த இடமாக இருக்கும்: மன்னிப்பவர்களாக இருக்க வேண்டிய தேவை, இரக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டிய தேவை, மற்றவர்களுக்கு உதவ வேண்டிய தேவை, முதலியன. இந்தப் பாடம் ஒரு வகுப்பில் பயன்படுத்தப்பட்டால், மாணவர்கள் இரக்கத்தை வெளிப்படுத்தக் கூடிய வழியை அவர்களே பட்டியல் இடும்படி கேட்டுக்கொள்ளலாம்.* [14]*பழைய ஏற்பாட்டில், மிருக பலிகள் செலுத்தும்படி கேட்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் நமது வாழ்வே பலியாக இருக்க வேண்டியுள்ளது (காண்க ரோமர் 12:1, 2).* [15]"Merciful" *என்பதற்கான* eleemon *என்ற கிரேக்கச் சொல்,* eleos *என்பதன் பெயர் உரிச்சொல் வடிவமாகும். இது "பரிவிரக்கத்தில் செயல்முனைப்புடன்" இருத்தல் என்பதைக் குறிக்கிறது* (Vine, 404). [16]Don Humphrey, *The Beatitudes* (Burlington, Mass.: Eternity Press, 1969), 44. [17]*"அவர்கள்" என்பது "அவர்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தைக்கு முன்னால் "அவர்கள்" என்ற வார்த்தையை உள்ளடக்குகிற வினைச்சொல் வடிவம் ஒன்றை இணைத்து தரப்படுவதால் வலியுறுத்தப்பட்டுள்ளது.* [18]William Shakespeare, *The Merchant of Venice* 4.1.184. [19]*சமீபத்தில் நான் ஒரு வகுப்பில் இந்தக் பாடத்தைப் போதித்தபோது, இரக்கம் நிறைந்தவர்களுக்கு இரக்கம் திரும்பி வருதல் பற்றிய உதாரணங்களைக் கேட்டேன், அப்போது வகுப்பில் இருந்தவர்கள் உதாரணங்களைப் பற்றிச் சிந்திக்கப் போராடினர். நாம் யாரேனும் ஒருவரைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கும்போது, அவர் திரும்பப் புன்முறுவல் பூக்கிறார், அதைப்பற்றி நாம் சிறிதளவே நினைக்கிறோம். நாம் அதை எதிர் பார்க்கிறோம். நாம் யாரேனும் ஒருவரைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கும்போது, அவர் திரும்பப் புன்முறுவல் பூக்காதிருந்தால், அல்லது நாம் யாரேனும் ஒருவருக்கு நன்மை செய்திருந்து அவர் நமக்குத் திரும்பத் தயவைக் காண்பிக்காது இருந்தால், அதை நாம் நினைவில் வைத்துக் கொள்கிறோம். வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் விதியை அல்ல, ஆனால் விதிவிலக்கையே நினைவில் வைத்துக் கொள்கிறோம்.* [20]*இந்த வேலக்காரன் பட்டிருந்த கடனை நவீனகாலச் சொற்றொடர்களில் விளக்கப்படுத்துதல் கடினமாக உள்ளது; ஆனால் அது திரும்பிச் செலுத்த இயலாத கடனாக இருந்தது. வேலைக்காரன் தனது எஜமானரின் இரக்கத்தையே முற்றிலும் சார்ந்திருந்தான்.*